[2008 ஏப்ரல் 29

175—

ஏற்றுமதி மையம்

***23359—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி மற்றும் அழகுசமுத்திரம் ஊராட்சிகளில் நார்க் கயிறு ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கருக்கல்வாடி மற்றும் அழகு சமுத்திரம் ஊராட்சிகளில் நார்க் கயிறு ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில், கருக்கல்வாடி, அழகு சமுத்திரம், சேலம், சூரமங்கலம், ஓமலூர், முத்துநாயக்கன்பட்டி, இளம்பிள்ளை போன்ற பகுதிகளில் சுமார் 100 நார் மில்கள் இருக்கின்றன. அவற்றில் சுமார் 5 ஆயிரம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள். 10 ஆயிரம் குடும்பங்கள் அந்தத் தென்னை நார் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய கயிறு தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அங்கு உற்பத்தி செய்யப்படும் பலவகையான கயிறுகளை ஆந்திரா, கர்நாடகா, குஜராத், டெல்லி போன்ற அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். உற்பத்தி செய்யக்கூடிய கயிறு வகைகளை முழுமையாக விற்பனை செய்ய இயலவில்லை. எனவே, அவற்றை ஏற்றுமதி செய்யும்வகையில் அத்தொழிலைச் செய்வதற்கு அங்கு ஒரு ஏற்றுமதி மையத்தைத் தொடங்கிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கருக்கல்வாடி, அழகு சமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் மொத்தம் 9 தென்னை நார் உற்பத்திக் கூடங்கள் உள்ளன. இந்த 9 கூடங்களில், வருடத்திற்கு சுமார் 1,920 மெட்ரிக் டன் தென்னை நார் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் 120 கயிறு உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களும் உள்ளன. இந்த நிறுவனங்களில் வருடத்திற்கு 12,700 மெட்ரிக் டன் அளவிற்கு கயிறு உற்பத்தி செய்யப்படுகிறது. இதுமட்டுமன்றி, இப்பகுதியில் கையினால் இயக்கப்படும் 500 ராட்டைகளும் உள்ளன. இதன்மூலம் வருடத்திற்கு 4,500 மெட்ரிக் டன் அளவிற்கு கயிறு உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆக, ஒட்டுமொத்தமாக வருடத்திற்கு 17,200 மெட்ரிக் டன் அளவிற்கு கயிறு உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கு 20,060 மெட்ரிக் டன் தென்னை நார் தேவைப்படுகிறது. கருக்கல்வாடி மற்றும் அழகு சமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் தென்னை நாரின் அளவு தேவையைவிட மிகக் குறைவாகவே இருப்பதால், வெளி ஊர்களிலிருந்து தென்னை நார் கொள்முதல் செய்யப்பட்டு, கயிறு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கருக்கல்வாடி மற்றும் அழகுசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் பழுப்பு நிற தென்னை நார் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. பழுப்பு நிற தென்னை நார் குறைவான நீளம் உள்ளதாக இருப்பதாலும், பழுப்பு நிறம் சாயம் தோய்க்க ஏதுவாக இல்லாததாலும், பழுப்பு நாரைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் கயிறுப் பொருள்கள் ஏற்றுமதிக்கு உகந்ததாக இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.* Coir block pith *எனப்படும் தென்னை நார் கழிவுக்கட்டிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டால், அதை அதிக அளவு ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது. சேலம் மாவட்டத் தொழில் மையத்தில் உள்ள ஏற்றுமதி வழிகாட்டி மையத்தின்மூலம் தேவையான ஏற்றுமதி வழிகாட்டுதல்களை வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2008 ஏப்ரல் 29

முற்பகல் 10—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதைக் கொண்டு வந்து, கே.சி.ஏ. கயிறு நார் மில் போன்ற நிறுவனங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கொடுக்கப்பட்ட முதலீட்டில் வாங்கிய அந்த மில் ஓட்டப்பட்டது. அதற்கு 20 சதவிகிதம் மானியம் 3 இலட்சம் ரூபாய் வழங்க இருந்ததை அந்த அரசு வழங்கவில்லை; இந்த அரசு, இந்த அமைச்சர் அதை வழங்குவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் பல்வேறு மானியங்களும் தொழில்களுக்கு நிறுத்தப்பட்டு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். அதன்மூலம், ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவுக்கு மானியம் தர வேண்டிய நிலையில், வெறும் 9 கோடி ரூபாய் மட்டுமே அவர்கள் வழங்கினார்கள். பாக்கித் தொகையை இந்த அரசு, கலைஞருடைய அரசு இப்போது வழங்கி வருகிறது. தாங்கள் கேட்ட அந்த மானியம் வழங்கப்படவில்லையென்றால், உரிய நடவடிக்கைகளை எடுத்து, விரைவிலே வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

176—

பட்டா

***839—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—